# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.139 /2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 9 | நாள் | : | 17.11.2025 |
| பெயர் | : | சரவணன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 5 யைத் தெரியும். சங்கரன்கோவில் கழுகுமலை சாலையில் உள்ள காந்திநகரில் வசிக்கிறேன். அ.சா.1 முதல் 5 ஆகியோர்களும் எங்கள் தெருவில் வசிப்பவர்கள் அதனால் அவர்களை எனக்கு நன்கு தெரியும். 01.09.2015 ம் தேதி பூலித்தேவர் நினைவேந்தலுக்கு அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்திற்கு வடக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது என்னிடம் கோவிலுக்கு அருகே கல் வீசி கலவரமாகிவிட்டது என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள் எனவே நான் புறப்பட்டு வந்தேன். கோவிலுக்கு

மேற்கே ரேசன் கடைக்கு பொருட்கள் கொண்டு வந்திருந்த லாரியின் கண்ணாடி உடைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்தது. மறுநாள் காலை 9 முதல் 10 மணியளவில் டி.எஸ்.பி லட்சுமணன் அங்கு வந்திருந்தார் என்னுடன் திருமுருகன் என்பவர் இருந்தார். அங்கு வைத்து டி.எஸ்.பி படம் வரைந்தார். சான்று பொருள் ஏதேனும் கிடைக்குமா என்று பார்த்தார் எதுவும் கிடைக்கவில்லை. எனவே அந்த இடத்தை பார்வையிட்டது குறித்து ஒரு ஆவணம் தயாரித்தார் அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பமிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். டி.எஸ்.பி என்னை விசாரித்தார்.

**வழக்கறிஞர் காணொளி காட்சி மூலம் ஆஜராகி குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.**

**2, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 முதல் 5 எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் சாலை மறியல் செய்து அந்த வழியாக சென்ற வாகனங்களை தாக்கி சேதப்படுத்தியதாக எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீது கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது பொய் வழக்காகும். அந்த வழக்கில் நானும் ஒரு எதிரி என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் என்னிடம் 4, 5 தாள்களில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை ஒரு தாளில்தான் கையெழுத்து வாங்கினார்கள். என் மீதுள்ள வழக்கில் என்னை ஜாமினில் விடுவிக்க காவல் துறையினர் கேட்டுக்

கொண்டபோது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.2 காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்ட கையொப்பம் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும். வரைபடத்தில் சொன்ன விவரங்களை கூறியிருந்தார்கள். நான் இரவு 10 மணிக்கு அந்த கையொப்பம் செய்திருப்பேன் என்றால் இல்லை மறுநாள் காலை 9 முதல் 10 மணிக்குள் கையொப்பம் செய்துள்ளேன். நான் கையெழுத்திடும் போது அந்த இடத்தில் சுமார் 10 முதல் 15 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். மற்ற நபர்களிடமும் காவல் துறையினர் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. காவல் துணை கண்காணிப்பாளருடன் வந்த நபர் படம் வரைந்து எழுதினார் அவர் பெயர் விவரம் தெரியாது. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தின் அருகில் இருந்ததில்லை என்றும் காவல் துணை கண்காணிப்பாளர் அந்த இடத்திற்கு வரவேயில்லை என்றும் என்னிடமும், மற்றொரு சாட்சியிடமும் கையொப்பம் பெறவில்லை என்றும் எங்கள் மீதான வழக்கிற்கு காவல் நிலையம் ஆஜராகியிருந்தபோது பெறப்பட்ட கையெழுத்தை பயன்படுத்தி ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் சமுதாயத்தினர் மீது வழக்கு போடப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு எதிராக வேண்டுமென்றே பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக் கொண்டதாக கூறியது பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.17 17:08:26 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.139 /2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 8 | நாள் | : | 17.11.2025 |
| பெயர் | : | குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். 01.09.2015 அன்று கொத்தனார் சங்க கூட்டம் சங்கரன்கோவில் கழுகுமலை சாலையில் காளியம்மன் கோவிலில் வைத்து நடைபெற்றது. நாங்கள் கோவில் கூட்டத்தில் அமர்ந்திருந்தபோது தொலைவில் சத்தம் கேட்டது நாங்கள் கிழக்கு நோக்கி எட்டிப் பார்த்தோம். அங்கு ஜான் பாண்டியன் படத்தின்மீது யாரோ செருப்பை வீசி விட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்குள் ஒரு வண்டி முத்துராமலிங்க தேவர் படம் ஒட்டப்பட்ட வேன் வந்தது. மேற்கே சென்ற வாகனம் மீண்டும் திரும்ப வந்து அந்த வேனில் வந்தவர்கள் கோவில் ஒட்டி தெருவில் அமர்ந்திருந்த குணசேகரன், மாரியப்பன்

ஆகியோர் மீது கல்லை எறிந்தார்கள் அவ்வாறு எறிந்த கல் அவர்கள் மீது பட்டு இரத்தக் காயம் ஏற்பட்டது. கூச்சல் அதிகமானது வேனிலிருந்து இறங்கியவர்கள் கத்தியை எடுத்து வந்து எங்கள் கூட்டத்தை பார்த்து கத்தியைக் காட்டி விரட்டினார்கள். அதற்குள் ஆட்கள் கூடிவிட்டார்கள். ஆட்கள் கூடியதும் திரும்ப வண்டியை எடுத்துச் சென்று ஓடிவிட்டார்கள். பக்கத்தில் இருந்த டீக்கடை அருகே இருந்த கடைகளை சமுதாயத்திற்கு சேர்ந்த கடைகள் என்று நினைத்து உடைத்துவிட்டார்கள். அதன்பின்னர் அங்கிருந்து வண்டியை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். எங்கள் ஊர் பசங்கள் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**வழக்கறிஞர் காணொளி காட்சி மூலம் ஆஜராகி குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.**

**2, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கழுகுமலை சங்கரன்கோவில் சாலையில் காளியம்மன் கோவில் மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் எப்போதும் போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகில் சாட்சி அக்பர் டிரெடர்ஸ், விநாயகர் கோவில், பழனிச்சாமி பெட்டிக்கடை, சென்ட்ரல் பாத்திரக்கடை, ஸ்டார் லைனிங் ஒர்க் கடை, பிரியாணி கடை, அரிசி மண்டிக் கடை, மொபைல் ஜாப், சைக்கிள் கடை, தேவேந்திர குல வேளாளர்

கட்டிடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து சுமார் 50 முதல் 100 வாகனங்களில் ஆட்கள் சென்றிருப்பார்களா என்றால் இல்லை. சம்பவ நேரத்தில் சுமார் 03 வாகனங்கள் சென்றிருக்கும். போலீசார் விசாரித்தபோது இந்த விவரங்களை நான் கூறவில்லை. நான் சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை பார்த்ததில்லை அவர்களை அடையாளம் தெரியாது பெயர் விவரமும் ஊர் விவரமும் தெரியாது. போலீசார் விசாரித்தபோது எதிரிகளின் பெயரையோ, ஊரையோ நான் குறிப்பிட்டுக் கூறவில்லை. அன்றைய தினம் சாலை மறியல் செய்து அந்த வழியாக சென்ற வாகனங்களை தாக்கி சேதப்படுத்தியதாக எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீது கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனக்கு தெரியும் என்றும் வேண்டுமென்றே அவ்வாறு தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவேயில்லை. வேறு வழக்கு சம்பந்தமாக என்னை வேறு எந்த காவல் அலுவலரும் விசாரிக்கவில்லை. அந்த சம்பவத்தை 50 லிருந்து 100 நபர்கள் பார்த்திருப்பார்கள் என்றால் சரிதான். அந்த சம்பவத்தை எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்கள் தவிர வேறு சமுதாயத்தை சேர்ந்த சிலரும் பார்த்தார்கள். அவர்களை காவல்துறையினர் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நானும், எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மற்றவர்களும் கழுகுமலை செல்லும் சாலையில் சாலை மறியல் செய்து வாகனங்களை சேதப்படுத்தினோம் என்றும் அவ்வாறு சேதப்படுத்திய சம்பவத்திற்கு எதிரிடையாகஇந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் வந்ததாக கூறப்படும் வாகனம் சுமோ ஆகும் மற்றும் இரண்டு வாகனம் வந்தது. அந்த வாகனத்தின் நிறம், பதிவெண் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரிகளை சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றும் எதிரிகள் அந்த இடத்திலேயே இல்லை என்றும் அதனால்தான் எதிரிகள் வந்ததாக கூறப்படும் வாகனம் பற்றியும் பதிவெண் விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. எந்த எதிரி என்ன விதமான வார்த்தைகள் சொன்னார் என்று என்னால் குறிப்பிட்டுக் கூற இயலாது. வண்டியிலிருந்த வந்த நபர்கள் எந்த எதிரி என்ன ஆயுதத்தை கையில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டுக் கூற இயலாது. யார் தாக்குதலால் எந்த கடை சேதமடைந்தது என்று குறிப்பிட்டுக் கூற இயலாது என்றால் சரிதான். இன்று நீதிமன்றம் ஆஜராகியுள்ள பெயர் விவரமும், இன்று நீதிமன்றம் ஆஜராகத எதிரிகளின் பெயர் விவரமும் என்னால் குறிப்பிட்டுக் கூற இயலாது. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரிகளை சம்பவ இடத்தில் பார்த்ததாக கூறுவதும், அவர்கள் வாகனத்தில் வந்ததாக கூறுவதும் கல் வீசி தாக்கியதாக கூறுவதும் கடைகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாக கூறுவதும் பொய் என்றும் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக் கொண்டதாக கூறியது பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.139 /2025**

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 7 | நாள் | : 17.11.2025 |
| பெயர் | : முத்துக்குட்டி | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி சித்திரைவேல், முத்து, குணசேகரன், மாரியப்பன் ஆகியோர்களைத் தெரியும். 01.09.2015ம் தேதி மதியம் 2 மணிக்கு சங்கரன்கோவில் கழுகுமலை சாலையில் உள்ள காளியம்மன் கோவிலில் கொத்தனராகிய நாங்கள் அனைவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். பொதுவாக நாங்கள் ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி கொத்தனார்கள் சங்க கூட்டம் நடத்துவோம். கௌரி சங்கர் தியேட்டர் அருகில் சத்தம் கேட்டது நாங்கள் என்னவென்று போய் பார்த்தபோது பூலித்தேவர் குருபூஜைக்கு வந்தவர்கள் ஜான் பாண்டியன் படத்தின் மீது செருப்புக் கொண்டு வீசியதாக சொன்னார்கள். அந்த கூட்டத்தில் வந்தவர்கள் மேற்கு நோக்கி கழுகுமலை சாலை நோக்கி வந்தவர்கள்.

தேவிடியா பள்ளப்பயலை என்று கூறிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் வந்த கார் கண்ணாடியை அவர்களே உடைத்துக் கொண்டார்கள். அங்கிருந்து வரும்வழியில் நாங்கள் கோவிலுக்கு வெளியே வந்தவுடன் எங்களை பார்த்து கையில், கம்பு, அரிவாள் ஆகிய ஆயுதங்களுடன் எங்களை தாக்க முற்பட்டார்கள். நாங்கள் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்தே எங்களை தாக்க முற்பட்டார்கள். அந்த நபர்கள் வந்த வாகனம் ஒரு வேன் ஆகும். அதில் முத்துராமலிங்க தேவர் படம் ஒட்டப்பட்டிருந்தது. அவர்கள் கல்லைக் கொண்டு பக்கத்தில் இருந்த கடைகளை உடைத்தார்கள். அவர்கள் குணசேகரன், மாரியப்பனையும் கல்லால் எறிந்ததில் காயம் ஏற்பட்டது. நாங்கள் அவர்களை தப்பிச் செல்ல விட்டுவிட்டோம். நாங்கள் அங்கிருந்து ஓடவில்லை. அன்று நேரில் வந்த நபர்களில் இருந்தவர்கள் ஆஜர் எதிரிகளும் இருந்தார்கள். அன்று இரவே காவல் நிலையம் சென்று சங்கரன்கோவில் நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அவர்கள் எங்களை விசாரித்தார்கள்.

**<u>வழக்கறிஞர் காணொளி காட்சி மூலம் ஆஜராகி குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.</u>**

**<u>2, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சி மாரியப்பன், குணசேகரன், சித்திரைவேல் எனக்கு பழக்கமானாவர்கள் என்றால் சரிதான். காளியம்மன் கோவில் சங்கரன்கோவில் கழுகுமலை சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அது மெயின் ரோடு என்பதால் போக்குவரத்து

அதிகம் இருக்கும் என்றால் சரிதான். முதல் சம்பவம் நடந்த இடத்திலிருந்து காளியம்மன் கோவில் வரும்பகுதி மெயின் பஜார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் அருகில் சாட்சி அக்பர் டிரெடர்ஸ், விநாயகர் கோவில், பழனிச்சாமி பெட்டிக்கடை, செண்ட்ரல் பாத்திரக்கடை, ஸ்டார் லைனிங் ஒர்க் கடை, பிரியாணி கடை, அரிசி மண்டிக் கடை, மொபைல் ஜாப், சைக்கிள் கடை, தேவேந்திர குல வேளாளர் கட்டிடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து சுமார் 50 முதல் 100 வாகனங்களில் ஆட்கள் சென்றிருப்பார்களா என்றால் காலை முதல் அவ்வாறு சென்று கொண்டிருந்தார்கள். சம்பவ நேரத்தில் சுமார் 10 வாகனங்கள் சென்றிருக்கும். போலீசார் விசாரித்தபோது இந்த விவரங்களை நான் கூறினேன். நான் சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை பார்த்ததில்லை அவர்களை அடையாளம் தெரியாது பெயர் விவரமும் ஊர் விவரமும் தெரியாது. போலீசார் விசாரித்தபோது எதிரிகளின் பெயரையோ, ஊரையோ நான் குறிப்பிட்டுக் கூறவில்லை. அன்றைய தினம் சாலை மறியல் செய்து அந்த வழியாக சென்ற வாகனங்களை தாக்கி சேதப்படுத்தியதாக எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீது கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்னர் நடந்ததாகும். என்னை மறுநாள் டி.எஸ்.பி. அவருடைய அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார். வேறு வழக்கு சம்பந்தமாக என்னை வேறு எந்த காவல் அலுவலரும் விசாரிக்கவில்லை. அந்த சம்பவத்தை 50 லிருந்து 100 நபர்கள் பார்த்திருப்பார்கள்

என்றால் சரிதான். அந்த சம்பவத்தை எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்கள் தவிர வேறு சமுதாயத்தை சேர்ந்த சிலரும் பார்த்தார்கள். அவர்களை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்று எனக்கு தெரியாது. நானும், எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மற்றவர்களும் கழுகுமலை செல்லும் சாலையில் சாலை மறியல் செய்து வாகனங்களை சேதப்படுத்தினோம் என்றும் அவ்வாறு சேதப்படுத்திய சம்பவத்திற்கு எதிரிடையாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் வந்ததாக கூறப்படும் வாகனத்தின் நிறம், பதிவெண் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரிகளை சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றும் எதிரிகள் அந்த இடத்திலேயே இல்லை என்றும் அதனால்தான் எதிரிகள் வந்ததாக கூறப்படும் வாகனம் பற்றியும் பதிவெண் விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. எந்த எதிரி என்ன விதமான வார்த்தைகள் சொன்னார் என்று என்னால் குறிப்பிட்டுக் கூற இயலாது. வண்டியிலிருந்த வந்த நபர்கள் எந்த எதிரி என்ன ஆயுதத்தை கையில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டுக் கூற இயலாது. யார் தாக்குதலால் எந்த கடை சேதமடைந்தது என்று குறிப்பிட்டுக் கூற இயலாது என்றால் சரிதான். இன்று நீதிமன்றம் ஆஜராகியுள்ள பெயர் விவரமும், இன்று நீதிமன்றம் ஆஜராகத எதிரியின் பெயர் விவரமும் என்னால் குறிப்பிட்டுக் கூற இயலாது. சம்பவத்திற்கு மறுநாள் என்னை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தாரே தவிர வேறு யாரும் விசாரிக்கவில்லை. நான் சொன்ன நாளில்

சொன்ன நேரத்தில் எதிரிகளை சம்பவ இடத்தில் பார்த்ததாக கூறுவதும், அவர்கள் வாகனத்தில் வந்ததாக கூறுவதும் கல் வீசி தாக்கியதாக கூறுவதும் கடைகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாக கூறுவதும் பொய் என்றும் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக் கொண்டதாக கூறியது பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.17 17:08:59 +0530